## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
## அருப்புக்கோட்டை.
## **அசல் வழக்கு எண். 130/2024**

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 13–07–2026.

பெயர் = ராமசாமி

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) வாதிகள் சங்கத்தில் நான் தற்போது பொறுப்பில் இல்லை என்றால் சரிதான். எவ்வளவு காலம் வரை நான் பொறுப்பில் இருந்தேன் என்றால் 2016–2018 வரை தலைவராக இருந்தேன். மேற்படி சங்கம் எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் 2016. அதற்கு முன்னர் பதிவு சங்கம் இல்லை என்றால் சரிதான். அதற்கு முன்னர் சமுதாயத்திற்கு பாத்தியமான சொத்துக்கள், கடைகள், கோவில்கள் அனைத்தும் எவ்வாறு பராமரிக்கப்பட்டது என்றால் சமுதாயம் ஒற்றுமையாக இருந்த சமயத்தில் நான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் அதற்கு முன்பாகவும் நான் தான் பராமரித்துவந்தேன். ராமசாமி, காளிதாஸ், ரங்கசாமி ஆகிய மூவரும் 2015 ல் நிர்வாகம் செய்து வந்தோம் என சாட்சி கூறுகிறார். எங்களுக்கு முன்பு சமுதாயத்தில் பராமரிப்பிற்கு பொறுப்பிற்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் பராமரித்து வந்தார்கள் என்றால் வருடத்திற்கு ஒருமுறை தேர்வு செய்யப்பட்டு பராமரித்து வந்தார்கள் என சாட்சி கூறுகிறார். தாவா 1ம் லக்க சொத்து களம் பயன்பாட்டிற்காக வா.சா.ஆ.8 ன்படி சமுதாய பொதுவிற்கு 1949 ம் வருடத்திய ஆவணத்தின்படி சமுதாய பொதுவிற்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் களமாக கொடுக்கவில்லை காலியிடமாக கொடுத்தனர் என சாட்சி கூறுகிறார்.

(2) மேற்படி பத்திரத்தை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் ஆமாம் களமாக பயன்படுத்துவதற்காக எழுதிக்கொடுத்தார்கள் கொஞ்சநாள்

களமாக பயன்படுத்தப்பட்டதற்கு அதற்கு பின்னர் களமாக பயன்படுத்தவில்லை. வா.சா.ஆ.8 ன்படி தாவாச்சொத்து சமுதாய பொதுவிற்கு பாத்தியமானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ல் லிங்காபுரம் 24 மனை தெலுங்குசெட்டியார் உறவின்முறை சமுதாய பொதுவிற்கு என எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 2ம் லக்கச்சொத்து காளியம்மன் கோவில் லிங்காபுரம் 24 மனை தெலுங்குசெட்டியார் உறவின்முறை சமுதாய பொதுவிற்கு பாத்தியமான பொதுச்சொத்து என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S